ஓலை 41 | ஓசை 145 | ஜுன் 2023

# அகர முதல இலக்கிய பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கிய பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# தினம் ஒரு திருக்குறள்



**விழுப்பேற்றின் அ:தொப்பது இல்லையார் மாட்டும்**
**அழுக்காற்றின் அன்மை பெறின்.**

யாரிடத்திலும் பொறாமை இல்லாதிருக்கப் பெற்றால், ஒருவன் பெறத்தக்க மேம்பாடான பேறுகளில் அதற்கு ஒப்பானது வேறொன்றும் இல்லை.

**Translation:**

If man can learn to envy none on earth,
'Tis richest gift, -beyond compare its worth.

**Explanation:**

Amongst all attainable excellence there is none equal to that of being free from envy towards others.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

நிர்வாக குழு

கு.செல்வமுத்துக்குமரன்

சிவம் அறக்கட்டளை

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

அ.வில்சன்

அலுவலக முகவரி

எண்.2 அய்யரப்பர் மேலவீதி, பெரியகண்ணாரத்தெரு

திருவாரூர் மெயின் ரோடு, மயிலாடுதுறை.

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# எனது சுற்றுச் சூழல் எனது பொறுப்பு

நெருப்பாலும் அழியாத நெகிழிகளைத் தவிர்த்தால்
நிமிர்ந்திடுமே புண்பட்ட நிலங்களுமே நன்றாய்
பொருள்தேடி ஓடினாலும் பொறுப்புடனே இருப்போம்
புற்றாக மாற்றாமல் பூமியினைக் காப்போம்
அருள்புரியும் இயற்கையினை அபலையாக்க வேண்டாம்
*அடிவயிற்று வேர்களையோ அறுத்திடவும் வேண்டாம்
*உருகியோடும் மழலையினை உயிர்த்சேதம் செய்தால்
உயிர்வாழ நீரதுவும் உயிர்ப்பின்றிப் போகும்

கடவுள்போல் நிறைந்திருக்கும் கண்டறியா காற்றை
காசிற்காய் மாசாக்க காணாமல் போவோம்
தடம்மாறிப் போகாமல் தகுந்தவழி அறிந்தே
தண்மையினை கொடையாக தரும்மரத்தைப் பேணி
நடந்திடுவோம் நெஞ்சுயர்த்தி நாளெல்லாம் ஊரில்
நன்மைபல பெற்றிடுவோம் நயமுடனே பாரில்
இடமமரும் இயற்கைக்கே இடையூறும் இன்றி
இன்பமாக வாழ்ந்திடலாம் என்றென்றும் போற்றி

குப்பைகளை வீதியிலே கொட்டாமல் இருப்போம்
குவித்துவைத்த குப்பைகளால் குடிபுகுமே பிணியும்
வெப்பத்தின் தாக்கத்தை வெகுவாக குறைக்க
விதைத்திடுவோம் பசுமைகளை வினைகளுமே வியக்க
தப்பாமல் மாற்றத்தை தன்னிடத்தில் தொடங்க
தானாக அழகாகும் தண்மைகளும் ஓங்க
அப்பப்பா எத்தனைதான் அறிவுரைகள் என்றே
அகலிடமும் வியக்குதப்பா அமைதியாக வாழ.



*அடிவயிற்று வேர் - மரங்கள்
*உருகியோடும் மழலை - நீர்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# சமாதானம்

தூக்கம் களவாடும்
சலசல துக்க குருவிகள்
விட்டத்தின் மீதேறி
கூடுகட்டும்
பிய்த்துத் தின்ற
பொய்களில் மீதமானதை
விட்டத்தில் இருந்தே
தூக்கியெறியும்
வாசிக்கத் தோணாத கண்கள்
வரிசை தப்பிப் போகும் மனம்
காணாத பார்வையில்
கரு மைநிரம்பிய
வரிகளோ விழிகளோ
கானல் நீரோட்டமே
தலை மேல் விழும் பொய்
எச்சமென்று எவர் உரைப்பார்
மேன்மை யிங்கு
மென்மை தராது
மெல்ல அடியும் தரும்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# கனிவு

அணில்களும்
பறவைகளும்
மந்திகளும்
கூட்டமாய் வந்ததும்
மரத்திற்கு
மகிழ்ச்சி வந்துவிட்டது.
காற்றிடம் அளவளாவிக்
கொண்டிருந்ததை
நிறுத்தி விட்டு
அணில்களின் ஆட்டத்தையும்
பறவைகளின் பேச்சையும்
மந்திகளின் சேட்டைகளையும்
தாயாய்க் கனிவுடன்
ரசிக்கத் தொடங்குகிறது
மரம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# சிறு துரும்பின் பயன்

சிறு சுடர்
பேரிருளை விரட்டிடுமே.
சிறு துளிகளே
பெரு வெள்ளமாகும்.

சிறிய விதைக்குள்ளே
பெரிய விருட்சம்.
சிப்பிக்குள் விழும்
சிறுமழைத்துளியே முத்து.



மூங்கிலில் வண்டு
துளைத்தது துளை.
அதன்வழி ஏகிய
வளி வெளியேற
வருவது செவி
நுகர் இசை.

தாளிப்பில் போடும்
சிறு கடுகின்
மணம் நாவின்
சுவையரும்புகளைத் தட்டும்.
துளி துளியாய்
தேனீக்கள் சேர்த்ததே தேன்.

துளி தேனே
நோய் அகற்றும் மருந்து.
சிறுதுளி விடம்
உயிரைக் காக்கும்.
சிறு விந்தணுவே தாயின்
வயிற்றில் கரு.

சின்னதொரு கருவே
பெரிய காவியமாகிறது.
யானை சிந்தும்
கவள உணவு
பல எறும்புகளுக்குப்
பலநாட்களின் உணவாம்.

சிறிய சிந்தனை
பெரியதொரு மாற்றம் தந்திடும்.
கடுகு சிறுத்தாலும்
காரமது அதிகமன்றோ!

சிறியோரை இகழாதே
பெரியோரைப் புகழாதே.

சிறு புன்னகை
சினமதைத் தவிர்த்திடுமே!

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# மலரில் மலர்ந்த மகரந்தம்

மதி மயக்கும் மதி முகமே
மங்கையின் பார்வை மயக்குதே என்னை
மனதின் உரசலில் மலருதே காதல்
மண்ணில் விழுந்த தூறல் போல்
மனதில் விழுந்த உன் நினைவுகள்
மலரில் மலர்ந்த மகரந்தம் உன்
மார்பில் கலந்தே வீசுதடி!



கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# பசித்திமிர்

மழையில் நனைவதை மறந்த மண்ணும்
பாளமென வெடித்துப் பசியால் வறண்டிட
பொய்த்த துளிகளும் பெய்திடும் நாளில்
பருவம் தவறியதை பட்டினியோடு விதைத்திட

வற்றிய உடம்பில் வடிந்திடும் வியர்வையில்
நனைந்திடும் உழவனின் நம்பிக்கையும் விளையுமென
பூச்சிமருந்திற்கும் உரத்திற்கும் பெறும் மானியங்கள்
அதிகார நாற்காலிகளின் அலட்சியத் திமிரால்
விதைத்தவை எல்லாம் விளையாமலே மடிந்திட

கருகியபயிரால் பங்கிட்டு கரைந்த நிவாரணத்தில்
கட்டிய கோவணமும் காணாமல் போயிட
அரைசான் வயிற்றுக்கு அலைமோதி பிடித்திடும்
வெள்ளெலி வேட்டையால் வேலியோரம் பசியாற

இனித்திடும் கரும்பும் இருப்போர்க்கு கசந்திட
இல்லாதோர் பசிக்கு இரும்பும் செறித்திட
உழைப்பினைச் சுரண்டி உத்தமராய் உலவி
பண்பினை இழந்து பணத்தினை பதுக்கி
போதுமென்ற மனமின்றி பொருள் சேர்க்கும்

அதிகார வர்க்கத்தின் அநீதிகளை துடைத்திடும்
விரல்கள் எதுவென விடைகளும் தெரியாமல்
வறுமையின் பிடியில் வாழ்வையும் இழந்து
வழியின்றி தவித்து வதங்கிடும் மனதில்
எழுந்திடும் பசித்திமிர்

எதற்கும் அஞ்சாது
அண்டத்தில் உள்ளதை
அக்னியாய் பொசுக்கிடும்



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# தமிழ் கொன்று வாழ்வுண்டோ

ஆதவன் போன்ற வெப்பமுண்டு
நிலவு போன்ற குளுமையுண்டு
வான் போன்ற வெளிவுண்டு
புவி போன்ற காந்தமுண்டு
மலர் போன்ற வாசமுண்டு
தேன் போன்ற சுவையுண்டு
வானவில் போன்ற வண்ணமுண்டு
குயில் போன்ற குரலுண்டு
தமிழ் போன்ற மொழிவுண்டோ
தமிழ் கொன்று வாழ்வுண்டோ!




கவிஞர் திருமதி சாந்தி சரவணன்,சென்னை 40

# விருந்தோம்பல்

அதிகாரம் 9

## உபசரிப்பு

விவசாயத்தின் பொருட்டே
வந்தவை விருந்து உபசரிப்பு

விருந்தினர் வீட்டில் இருப்பின் சாகா மருந்தாயினும்
பகிர்ந்து உண்பதே சிறந்தது

ஒவ்வொரு நாளும் விருந்தினரை
எதிர்பார்ப்பவரின் வாழ்வை எந்த வறுமையும் அண்டாதே.

முக மலர்ந்து விருந்தினை உபசரிப்பவரின் வசம்
சோம்பல், வறுமை, பஞ்சம், எல்லாம் பத்தடி தள்ளிப் போகுமே.

விருந்தினருக்கு அமுது படைத்து விட்டு
பின்பு உண்பவரின் நிலம் கூட அட்சய பாத்திரமே

விருந்தினரை உபசரிப்பவனுக்கு அந்த விருந்தோம்பல்
மேன்மை பொருந்திய வேள்விக்கு சமமாகும்




முக மலர்ந்து உபசரிக்க வேண்டும்
இல்லையேல் பின்னர் வருந்தி பயனேது?

அனிச்சம் மலர் போல் இல்லாமல்
விரிந்தகமலம் போல மலர்ந்த முகத்துடன்
அன்பாகஉபசரிப்போரின் உள்ளத்தில்
அறமும் மகிழ்வும் கிடைத்து பெரும்பேறு அடைவார்களே

தெய்வத்தின் அருள் என்றென்றும் நிலைத்திருக்குமே.

கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# தந்தையின் பாசம் விலை மதிப்பில்லாதது

எனக்கு உயிர் கொடுத்த தெய்வம்
தந்தை தோளை விட வேறு சிம்மாசனம் இல்லை
தோழனுக்கு தோழனாய் இருந்தவர் தந்தை
கோடி பணம் இருந்தாலும் தந்தைக்கு நிகராகர்
தந்தை என்ற மூன்றெழுத்தில் அகிலமே அடங்கும்
சோகங்கள் இருந்தாலும் மறைத்து அன்பை வெளிப்படுத்தியவர்
உழைத்து ஓடாய் தேய்ந்தவர் தந்தை

தந்தையின் கண்ணீரே நமக்கு வழிக்காட்டி
சுவாசத்தின் மூச்சாய் நம்மோடு இருப்பவர்
திறக்க முடியாத அரிய புத்தகம்
நமக்காக நாளும் பகலும் உழைத்த உழைப்பாளி
தனக்காக இல்லா விட்டாலும் குடும்பத்துக்காக சேர்த்தவர்
பாசத்திற்கு பங்கு போட யாரையும் விடமாட்டார்
முத்துக்கு முத்து கண்ணுக்கு கண்ணாக இருந்தவர்



தான் ஆடா விட்டாலும்
தன் சதை ஆடும் என்பதை உணர்த்தியவர்
குடும்பத்தின் ஆணி வேராக இருந்து காத்தவர்
எத்தனை ஜென்மங்கள் ஆயினும் தந்தை நிகர் தந்தையே
பொக்கிஷமான தந்தையை வைத்து பாதுகாப்போம்
தந்தை சொல் மிக்க மந்திரம் வேறு ஒன்றிலும் கண்டதில்லை
கஷ்டங்கள் பலவற்றை உணர்ந்து வாழ்ந்தவர்

கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# எனது வாழ்க்கை!

விரிந்து கிடக்கும் இம்மாய உலகில்
நானோ வெறும் காகிதம்தான்
தொடர் மாடிகளை அடுக்கி வைத்து
தலைக் காட்டும் வீதியோரங்களே
நான் வாழும் பாசமிகு வீடு

அம்மா என்றழைக்க ஒரு ஜீவன் இல்லாமல்
அப்பா கைகோர்க்க வழிகளும் இல்லாமல்
உறவுகள் இன்றி உறங்கும்
இரு விழிகளும் என் வசமே

பஞ்சு மெத்தை போர்வை என்றெண்ணி
நீல வானமே என் போர்வை என
கண் அயர்கிறேன் ஒவ்வொரு இரவிலும்

காரிருளை களைத்துக் கொண்டு
பளிச்சிடும் மின் விளக்காய்
நிலவு தரும் ஒளியே என் விளக்கு

நான் கண்ட இம்மாய உலகில்
சுறுசுறுப்பாய் சுற்றித் திரியும் எறும்புகளுக்கும்
தெருவெங்கும் பறந்து திரியும் நுளம்புகளுக்கும்
தோழியும் நான்தானே

பார்ப்போரின்றி கேட்போரின்றி
இறை உயிரை சுமந்து கொண்டு
பிஞ்சுகால் நொந்து போக
இவ்வுடல் உலாவுகிறது வீதியிலின்று

இறுதி வரை என் உயிர் தோழி
தனிமை தான் எனக்கு இருக்கும் ஓர் வழி
உன்னுடனே என் இறுதி மூச்சை
இறை பெயர் கொண்டு விடுவேனோ



கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# மகத்துவம் காண்போம்

மனிதன் பிறக்க
மகத்துவம் காண்போம்

நன்மைகள் செய்வோம்
தீமைகள் களைவோம்

இன்முகம் கொண்டு
இனியவை செய்வோம்

தான தர்மங்கள் செய்து
தனியனாக நிற்போம்

நீரோட்டத்தோடு ஓடாமல்
எதிர்நீச்சல் போட்டு

வறுமை இல்லா
உலகம் கண்டே

சிகரங்களின் உச்சியில்
வெற்றிகள் காண்போம்

உழைப்பின் உயர்வுகளில்
உன்னதங்களை சொல்வோம்

உண்மைகள் உறங்காமல்
உரிமைக்காக போராடுவோம்

விண்ணில் வித்தைகளை
விதைத்தே விந்தையராகிடுவோம்



கவிஞர் இரஜகைநிலவன்,மும்பை

# நேசம்

என்னை எங்கெல்லாம் தேடினாயோ,
எவ்வளவு நாளிருந்து வந்தாயோ?
எப்போது கண்டுகொண்டாயோ?
எந்தனிடம் காதல் சொல்லத்துணிந்தாயோ?
துணிந்த சொல்லாலே மனதிலும் பதிந்தாயோ!
பதிந்த நீயும் வாழ்வினிலே நுழைந்தாயோ,
நுழைந்த உனை என் மனதில் ஏந்தினேனே!
ஏந்தியெனை ஏகாந்தமாய் திளைக்க வைத்தாயோ
உன்மத்த உரிமையெலாம்
உவமையால் உணர்ந்தேனோ?

எனை விரும்பிய எனதாருயிரே,
எத்தனை நாளாய் காத்திருந்தேன்
நீ வந்ததாலே முகம் பூத்திருந்தேன்
நீ வராத நாளும் நினைத்திருந்தேன்
நீ இருந்த நாளும் திகைத்திருந்தேன்
நீ பேசிய சொல்லாலே சிரித்திருந்தேன்
நீ பார்க்கும் பார்வையில் சிலிர்த்தெழுந்தேன்
நீ வரும் பாதை பார்த்திருந்தேன்
நீ இல்லாத நேரமும் வியர்த்திருந்தேன்
உன்மத்த நேசமெல்லாம்
என் மொத்த வாழ்வையும்
நேசிக்க வைத்ததே!



கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# விழித்தெழு சமூகமே

தூக்கம் உன்னை சோம்பல் ஆக்கும்
ஆக்கம் அதனை அழிவாய்த் தாக்கும்
நோக்கம் நிறைவேற்றம் இன்றித் தேக்கம்
ஊக்கம் ஒன்றே உன்னைக் காக்கும்
அறியாமையெனும் உறக்கம் நெறியையே மாய்க்கும்
குறைகூறும் மாந்தர்கூற்று படுகுழியே சேர்க்கும்
பறைசாற்றும் தன்னம்பிக்கை பாதகங்கள் நீக்கும்
இயலாமை தகர்த்து இன்றே எழுந்திடு
இயலுமை பகர்ந்து இமயமாய் இலங்கிடு
தயங்காமல் முயன்றிடு முயற்சி பலன்தரும்
வியந்திடும் உலகும் மகிழ்ச்சியுன் வசப்படும்
விழித்தெழு சமூகமே விந்தை ஏதுமில்லை
அழித்திடு தாழ்வெண்ணம் சிந்தையில் குறையில்லை
சிந்தனை சிறகுகள் சீராய் விரித்திடு
நிந்தனை இன்றியே வாழ்வில் சிரித்திடு
காயங்கள் எல்லாம் மாயங்கள் ஆகும்
கனவுகள் அனைத்தும் நனவாய் மாறும்
புறப்படு பயணம் பாதை திறக்கட்டும்
சிறப்போடு வாழ்வில் வசந்தம் பிறக்கட்டும்



கவிஞர் பஸ்லா பர்ஸான்,காத்தான்குடி(இலங்கை)

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே! முகமும் தமிழே!!

# பணமே பலம்

பணத்தைக் கண்டால்
பிணமும் வாய் திறக்கும் என்று சொல்லுவார்கள்
அந்த அளவிற்கு பணத்தின் ஆதிக்கம்
மனிதர்களிடையே உண்டு.

பணமும் மகிழ்ச்சியும் பரம விரோதிகள்.
ஒன்றிருக்கும் இடத்தில் மற்றொன்று
இருப்பதில்லை



பணம் இருந்தால் உன்னை
உனக்குத் தெரியாது.
பணம் இல்லாவிட்டால்
யாருக்கும் உன்னைத் தெரியாது

பணம் இருந்தால், நீங்களா!
என ஆச்சரியமாக கேட்பதும்.
அதுவே பணம் இல்லாமல்
இருந்தால் "ஓ நீயா?"
என்று கேவலமாகவும்
பார்ப்பதுதான் இந்த உலகம்

பணமா? பாசமா? என்று
கேட்டால் எல்லோரும்
பாசம் என்றுதான்சொல்லுவார்கள்.
ஆனால் அந்த பாசத்தின் அளவை
நிர்ணயம் செய்வதே
இங்கே பணம் தான்.

இங்கு உலகம் உன்னை
தூக்கி வைத்து ஆடுவதையும்
தூக்கி எறிந்து வீசுவதையும்
நிர்ணயிப்பது உன் குணமல்ல
நீ வைத்திருக்கும் பணம்

பணம் கொடுத்தால் பல
உறவுகள் உன்னை
தலையில் தூக்கி வைத்துப் போற்றும்.
கொடுத்த பணத்தை திரும்ப கேட்டுப் பார்
மண்ணை வாரித் தூற்றும்.

காலம் நமக்கு கற்றுக் கொடுத்த பாடம்
"பணம் இருந்தால் நாலு பேர்
நம்மை திரும்பி பார்ப்பார்கள்
பணம் இல்லையோ நாம்
நாலு பேரை திரும்பி
பார்க்க வேண்டும்

கவிஞர் ர.ரமேஷ்,திருப்பூர்

# மணக்கோலம்

உருகி உருகி நான் நேசித்த
உறவொன்று உறவாகிப்
போனது உற்றவனுக்கு.

காலத்தின் கோலத்தில்
மணக்கோலம் பூண்டு
மணவறையில்
மணமகளாய் வீற்றிருக்க
மங்கள வாத்திய முழக்கத்தில்
மாங்கல்யம் கண்டது மாலை சூடி.

மற்றவர் அறியா
மன வலியினை - உன்
மனதில் குடியிருக்கும்
நான் அறிந்தும் பயனென்ன.



சுடும் வார்த்தைகள் கூறும்
சுற்றத்திற்கு அஞ்சி
நெருப்பில் சுட்டெரித்தாயே
காதலை குற்றமென.

மலர் சூடிய மல்லிகை
அவளின் மணம் தந்த
மன வேதனை இதயம் கிழிக்கும்
வலி என்றாலும் இதமாய்
தாங்குவேன் உன்
நினைவுகளால்.

ஆனால் இதயமே உன்
வருங்கால மகிழ்ச்சியில்
வறுமை என்றால் - அதன்
காரணத்தை என்
உயிரற்ற உடலாலும்
கல்லறையாக்குவேன்.

கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# அழுபவன் கோழை

அவமானம் உன்னை கொல்லப் பார்க்கும்
அடி சரிந்தால் கேவலப் படுத்தும்
அநியாயம் மூச்சு முட்ட வைக்கும்
அழகாய் குத்திக் காட்டி வெட்டும்

படுதோல்வி மனதை வதைக்கும்
பயங்கரமாய் தினம் தினம் பயமுறுத்தும்
பயத்தால் இறக்க எண்ணம் எழுப்பும்
பணமின்றி கடன் தலையை நெருக்கும்

புகை பட்டாலும் பழி சொல்லும்
புத்தி இல்லாதவனாகவே உன்னை பார்க்கும்
புதிய தவறை அம்பலப்படுத்தும்
புது புது விமர்சனம் வந்துசேரும்



இடியாக விதியின் செயல் ஆட்டும்
இடித்து தள்ளி கீழே போடும்
இடை விடாது அடிகள் விழும்
இடை மறுக்க யாருமின்றி தவிக்கும்

அழுகையால் உன் கவலையை ஆற்றுவதோ?
அது கேவலம் என்பதை அறியமாட்டியோ?
அடித்து எழுந்து சாதிக்க வேண்டாமோ?
அடுத்து நடப்பதை எதிர்த்து நிற்கலாமே

கண்ணீர் காயத்துக்கு மருந்து இல்லை
கலங்காது துள்ளி எழுந்து சாதி
கலக்கத்துக்கு கண்ணீரை வர வை
கலக்கிடு வெற்றியால் உன் வாழ்வை

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# நினைவில் கொள்

இன்பம் இன்னல் எதுவாயினும்
இயல்பு மாறாமல் ஏற்கும்
மனநிலையை காலம் தந்திடும்!

நேர் கொள்ளும் நிகழ்வு
கையளிக்கும் பரிசை முத்தமிடும்
பழக்கத்தை வழமையாக்கிடு!

நிலையற்ற உலகில் நிலையான
ஒன்று எதுவும் இல்லை என
மனதில் ஏற்றிடு!

சூழலியல் மாற்றம் போல் மாந்தர்
எண்ணமும் மாறும் என்பதையும்
நினைவில் கொள்!



கவிஞர் செ.தமிழ்நேயன்,சென்னை

# உரை தமிழே உரை

நுரைத்தமிழே இதய கரைத்தொட்டு போ
தரைத்தமிழே கைதியாய் சிறைப்பட்டு போ
விரைதமிழே என்னுள்ளே கரைப்பட்டு போ
இரைத்தமிழே உரையாகி உறைப்பட்டு போ



கவிஞர் மதீரா அறிவிப்பாளினி,இலங்கை

# பேசும் சித்திரமே

பிள்ளையின் பேச்சழகில்
தாயின் மனமும் தவம் கிடக்கிறதோ!
சிரித்து பேசும் அழகில்
மனமும் சிறகை விரிக்கிறதோ !
இன்னும் நேரம் வேண்டும் என்று
நெஞ்சமும் துடிக்கிறதோ !
கண்கள் பட கூடும் என்று
கவிதை வரிகள் நின்றுவிட்டதோ!
குறும்புகள் செய்யும் பிள்ளை
இவனின் சேட்டையில் !
சேர்ந்தே இதயமும் இன்னிசை
பாடுதோ !
கனவாக வந்த பிம்பங்கள் இன்று
சித்திரம் ஆனதோ !
அன்னையான இவளும் அன்பை
சொல்லவே! ஆண்டவன் அவனும்
அட்சதை தூவினானோ!
பிள்ளை வரம் என்பது
பெற்றாள் தானோ !
பெண் அவளில் இருக்கும்
குணமும் தாய்மை தானாடா !
இது மட்டுமே உலகை ஆளுமடா !



கவிஞர் சாரா ஜகன்,சென்னை

# தனி ஒருவன்

ஒருவனாய் பயணம் செய்கிறேன்
ஒட்டுமொத்த கூட்டத்திற்கு தனியாய்
போதுமென்ற வலி காய்த்ததனால்
தீதுதொன்று பிறர் தர வாரா
கிளையொன்றுமில்லை வேரினை அறுத்து
ஒட்டுண்ணி தாவரம் அறுத்தெறிந்த போதிலும்
துளி பசையொன்று துளிர்விடுமே அன்று
உன் எண்ணமும் செயலுமே துளி பசை விட காரணம்



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# தெரிந்து செயல்வகை




புத்தாக்கம் தொடங்குங்கால்
முன்னழிவையும் பின்விளைவையும்.
ஆக்கமதின் இலாபத்தையும்
ஆராய்தலே தெளியறிவாம்.

சேர்இனத்தொடு கோருமாக்கம்
தேர்ந்தபணியாய் இருக்குங்கால்.
வேர்விட்டு நெடுங்காலம்
நற்பலனைத் தந்திடுமாம்.

வருங்கால இலாபங்கருதி
தற்கால மூலதனமிழக்க.
காரணமாம் மூடச்செயலேதும்
அறிவுடையார் மேற்கொளராம்.

இழிபயக்கும் குற்றமஞ்சுவோர்
இன்ன ஊதியம்பயக்கும்.
தெளிவிலா புத்தாக்கத்தை
ஒருபோதும் தொடங்கிடாராம்.

முற்றும் ஆய்ந்தறியாது
பெற்றறிவு போதுமென்றே.
புத்தாக்கம் இயற்றிடல்
பகைவளர்க்கும் பாத்திநிறுத்துமாம்.

தகாச்செயல் செய்திடினும்
தகுஞ்செயல் செய்யாதுவிடினும்.
தக்கசமயம் கேடுவந்து
தரைமட்டமாக்கிப் போடுமாம்.

ஆழ்ந்து ஆய்ந்தறிந்தபின்
ஆக்கச்செயல் தொடல்நலம்.
ஆரம்பித்தபின் ஆராய்தல்
அழகற்ற மூடத்தனமாம்.

தக்கமுறையொடு செய்யாதாக்கம்
ஒக்ககூடி பலர்காத்துநின்றும்.
ஒன்றும் பலனின்றி
வெட்கப்பட்டுப் போகுமாம்.

அவனவன் இயல்பறிந்து
அவனவனுக்கு நடத்தாவிடில்.
நன்மையாய் ஆக்கிடினும்
வன்குற்றம் நடந்தேறுமாம்.

பொருந்தா ஆக்கமதை
பெருநிலம் ஏற்காததலால்.
பெருமையினது ஆக்கத்தையே
ஆராய்ந்து நடல்நலமாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# மூப்பு என்னும் வாதை

நாடாளும் அரசனானாலும்,
வீடாளும் மாந்தரானாலும்
எவரும் தப்பவே முடியாத
வாதை என்பது
பிறவி என்னும் வியாதியோ!
ஒரு நொடியில் முன்
நிற்பவரை மறந்து
கழன்று விழுகிறது
உயர்ந்தோரின் ஆன்மா
என்கிறார்கள் பலர்;
உடலாலும் உள்ளத்தாலும்
எத்தனை எத்தனை
கொடிய வாதைகளைக்
கடந்து வந்தாலும்
ஏதோ ஒரு கண்ணில்
வராத காட்சிக்காய்
காத்துக் கொண்டு
வதைபடும் மூப்பு
நோயாளிகளுக்கு எல்லாம்
மருந்து என்பது ஏது?
தினம், தினம்
இந்தக் கேள்வியுடனேயே
வதைபடுகிறேன் நானும்;
விடை சொல்ல வருவார் எவரோ?
நான் வணங்கும் தேவனே!



கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# ரயில் பயணம்

செங்கோதை மனம் சிறகடிக்க
சீவலன் மனம் பறபறக்க
ஔடதமாய் மாற்றி பரிமாற
பழிக்கு பழி வாங்க காத்திருப்பில் மெய்.



முக்கனியாம் முதல் கனியது
மாம்பழமாம் மாம்பழம்.
ருசிக்க ருசிக்க நாவுக்கு
பசிக்க பசிக்க.

நங்கூரமாய் நாவிலே ருசி ஒட்டிக்க
மாங்கனி சூட்டில் நாசியிலே
ஓயாத புயல்.
அடங்காத வெள்ளம்.

அணையிட ஔடதமாம்.
அணையிட வாய்ப்புகளோ குறைந்தனவாம்.
ஓயாத இரயில் பயணத்தில் சிக்கிய
மேனியும் அதன் நிலையும்.

கனிவோடு ருசித்தேன்.
காய்ச்சலில் தவித்தேன்.
கலைந்த விழியோடு பயணித்தேன்.
காகிதம் போல மிதந்தேன் நீரோடையில்.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# சிந்தனையில் நில்

யாரோ
ஒருவன்
ஒருவளால்
உன் உறவை இழக்காதே



வயது
வழக்காடும் நேரம்
போராட தயாராக இரு

அழகு நிறைந்த பெண்ணிடம்
காதல் கொள்வது
உன் அறிவை அளிக்கும்

கண்களைக் கண்டு
கடமையை இழக்காதே
காலத்தில்

பெண் மோகத்தில்
உன் தாகத்தை
இழக்காதே

உன் சக்திக்கு
புத்தியை தீட்டு
விதியை தீட்டாதே

விடையை தேடாதே
கேள்வியை தேடு
ஆயிரம் விடை தரும்

வலிக்கு வலி
கொடுக்காதே
மறந்து கடந்து செல்
மாறிவிடும்

சிந்தித்துப் பார்
சிரித்துக் கொள்
சிறகை விரித்திட

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# இதயம் பேசுதே

வாயின்றி பேசிடும் விசித்திர விந்தையிது
சத்தமின்றி பேசிடும் சைகையின்றி பேசிடும்
இடித்துரைத்தும் பேசிடும் இன்பமாகவும் பேசிடும்
இயலாமையிலும் இன்னலுடன் முணுகுமே இதயம்

வலிதாங்க இயலாமல் மௌனமாய் அழுதிடும்
சந்தோஷம் வந்திட்டால் சிறகில்லாமல் பறந்திடும்
படைப்பில் மென்மையெனினும் பக்குவத்தில் வலிமைதான்
இரவுபகலாய் உழைத்து உயிரோடு நம்மை காக்கும்

இன்னல் வரும் வேளையில் துடியாய் துடிக்கும்
எத்தனை முறை உடைந்தாலும் தானகவே ஒட்டிக்கொள்ளும்
சாதாரண மனிதனையும் அசாதரணமாய் மாற்றி டும்
இதயம் பேசும் மொழி இனிமையானது

நல்லிதயம் அன்பினை அளவில்லாமல் சுரக்கும்
எதிரியையும் மன்னிக்கும் துரோகத்தை வெறுக்கும்
பொக்கிஷ சாலையாய் மின்னி ஜொலிக்கும்
இதயமொழியறிந்து அதன்படி நடந்தால் வாழ்வே இனிக்கும்

இனிய இதயங்களின் சங்கமம் சரித்திரம் படைக்கும்
இதயத்திற்கு வேதனையளிக்கும் கசப்புகளை வேரறுப்போம்
இதம் தரும் மொழியினை கேட்போம்
இன்பம் என்னாளும் நம்மில் பொங்கும்

கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# மரம் தரும் வரம்

ஒரு கோடை முடிந்து
பூத்துக் காய்க்கும் போது
இந்த வேப்ப முத்துக்களை பொறுக்கி
அந்த மூதாட்டியால்
தன் வாழ்க்கையை கடத்த முடியும்

வடை சுட நேரிடுகையில்
அந்த பூவரசு இலைகள்
உள்ளங்கையில் உபயோகப்படுத்தப்படலாம்

வெயிலுக்கும் மழைக்கும் ஒதுங்க
உயிரினத்துக்கு ஒரு உறைவிடமாய் அமையலாம்
அஃறிணைளுக்கு பசுந்தாள் தீவனங்கள் கிடைக்கலாம்,
இலைகளை இழந்த இதன் துரும்புகள்
கூடப் புறாக்கள் கூடு கட்ட உதவலாம்

முட்செடியாய் இருந்தால் கூட
காய்ந்த பின்
கால் வயிறு கஞ்சிக் காய்க்க விறகாகலாம்

ஓரிரு மரங்கள் அருகே வளர்த்தால்
பூமி தன் பழைய படிமமானக் காட்டை
நினைவு கூறலாம்

வேர்களைப் பற்றி ஒன்றும் யாரும்
பார்க்க வேண்டியதில்லை,
அவைகள்
ஒன்றாய் தான் இணைந்திருக்கும்
எப்பவுமே.



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

அகர முதல இலக்கிய பேரவை
அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

# ஒப்பனை மிருகங்கள்

வாழ்க்கை மேடையில்
வாழும் நாடகம்
விமர்சன வாட்களால்
வீழ்த்தும் போர்க்களம்

குருதியில் கலந்த
கழிவு எண்ணமோ
மூர்க்க புத்தியில்
முளைத்த குற்றமோ

உண்மையின் உடலை
உரித்துப் பார்க்கிறார்கள்
தூய்மையான இதயத்தை
தின்றுத் தீர்க்கிறார்கள்

பூசும் பூச்சுக்கள்
பூக்களாய்த் தெரிந்திடும்
வீசும் வீச்சுக்கள்
கணைகளாய்த் தாக்கிடும்

சந்தனம் போல
சாக்கடை இருக்கும்
வெந்திட வைத்து
வேதனை கொடுக்கும்

ஆழத்தில் முளைத்த
ஆட்கொல்லி விசம்
பேழைக்குள் முடக்கி
பேணிடும் வசம்

பால்போல கள்ளும்
பாங்காய் இருக்கும்
வேல்போல குத்தி
வெண்புண் ஆக்கும்

ஒத்திகை பார்க்கும்
ஒப்பனை மிருகங்கள்
கத்தியாய்க் கிழிக்கும்
கண்ணெதிரே கோணங்கள்

அகத்தின் நிறமதை
அறிந்துச் செயல்படு
முகத்தின் நகையினை
முன்னே உடைத்திடு

உழலும் மனிதம்
உத்தமராய் இல்லை
உள்ளொன்று வைத்து
உருவாக்கும் தீயை

பேசும் சொற்களில்
பொறாமை விளையும்
வன்மத்தின் வடுக்கள்
வஞ்சகத்தில் வளரும்

சத்தியத்தின் வழியில்
சாயங்கள் களைவோம்
சரித்திரத்தை மாற்றும்
சக்கரமாய் சுழல்வோம்

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

அகர முதல இலக்கிய பேரவை
Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# குரோதம்

பொல்லாத மனம் தன்னில்
பொங்கி வரும்
குரோதம் அதைக்
கொன்றுப் புதைத்திட!
அகிலம் எங்கும்
அன்பு தழைத்திட!
அன்பே சிவம் என்று
உணர்ந்திடு!
ஈசனை உன்னுள்
இருத்திடு!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# குடும்பம்



விட்டுக்கொடுத்தலில்
ஒளிச்சேர்க்கை
செய்யும்
விசித்திர
தாவரம்

அடர் காடுகளோ
ஆர்ப்பரிக்கும்
அலைகளோ
கைகள் பின்னி
கவலை அறுக்கும்
மாமருந்து

வழி அனுப்பி
விட்டு
மீண்டும்
வாசல்
நோக்குவதற்கு
அர்த்தங்கள் கூறும்
அகராதி

அத்தனை
உணர்வுகளையும்
கொட்டி விட்டு
விழித்தாலும்

மறுநொடி
புன்னகையால்
மாயாஜாலம்
நிகழ்த்தும்
மந்திரவாதி

வாழ்க்கை
வரைந்த
கடமைகள்
ஒவ்வொரு நாளும்
கொண்டாடப்படட்டும்

ஏனெனில்
கடவுள் தனது
பயணத்தை
ரசனையாக்க
குடும்பத்தை
படைத்திருக்கிறான்

யாருக்குத் தெரியும்
உங்கள்
உணவு மேஜையின்
ஒரு ஓரத்தில்
கடவுளும்
இருக்கலாம்

கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# இயற்கை

காலை நேரம் என் கால்கள் பயணம் போகும்
இளம் குயில்கள் கீதம் பாடும்
என் மனம் மெல்ல அதை ரசித்து தாலம் போடும்
தென்றல் காற்று அசைந்து ஆடும்
தேன் குடிக்கும் வண்டுகள் சிரிப்பது ஆகும்
பூக்களின் அன்பு காதல் ஆகும்
பறவைகளின் வார்த்தை கவிதை ஆகும்
பாயுந்து ஓடும் நீரின் ஓசை புது மெட்டு போடும்
பார்ப்பவர்கள் மனத்தை கவர்ந்து போகும்
இயற்கையின் வளம் மிக அழகாகும்
அள்ள அள்ள கொடுப்பது
இயற்கையின் கருணையாகும்
வாசம் இல்ல மலர் புது நேசம் ஆகும்
புன்னகையின் எண்ணம் புதுவண்ணம் ஆகும்
பூத்து குலுக்கும், மரம், செடி, கொடி,
இயற்கையின் சொந்தமாகும்
துள்ளி ஓடும் விலங்குகள்
இயற்கை அன்னையின் பிள்ளையாகும்
வாழும் மனிதன் இயற்கையின் படைப்பாகும்
ஆண்டவானின் அற்புதம் மிக அழகாகும்
ஒவ்வொன்றும் ஒரு உயிர் ஆகும்
அதை உணர்ந்தால் மிக அழகாகும்
காற்றின் தேவை அதிகமாகும்
காடுகளை அழிப்பாது மிக தவறாகும்
வறண்டு போவது நிலம் ஆகும்
வாழ வைப்பது மழையாகும்
மனிதனின் தேவை அதிகமாகும்
இயற்கையை காப்பது உன் கடமையாகும்
உன்னை வாழ வைப்பது இயற்கை
அன்னையின் பொறுப்பாகும்




கவிஞர் எஸ்.தாரா,சேலம்

# நடுவு நிலைமை

பருந்தொன்று புறாவொன்றை விரட்டி வந்தது;
பசிக்குந்தன் வயிறுக்கு விருந்தாக்கவே விரட்டிவந்தது!
புறாவும் தன்னுயிர் காக்க பறந்தது;
பறந்து வந்த பருந்திடமிருந்து தன்னைக்காக்க
பழியேதுமில்லா மன்னன் சிபியிடம் சரணடைந்ததே!

சரணடைந்த புறாவைக் காப்பதாய்ப் புனிதன்
சிபியும் உறுதியளித்தான் உதவிவேண்டிய புறாவிடம்;
சிந்திக்கவில்லை அவனப்போது பருந்தேன் விரட்டுகிறதென்று!
சீறியது பருந்தும் சிபியிடம் புறாவுக்காக;
சிறிதும் ஏற்கவில்லை சிபிமன்னன் புறாவின் புகாரை!

பருந்தும் விடுவதாயில்லை புறாவின்மீது தன்னுரிமையை;
புறாதன் இரையதைத் தன்னிடம்தர கேட்டது;
புறாவின் உயிரைக்காப்பதாய்ச் சொன்ன மன்னனிடம்
பசியால் தானிறந்தால் பரவாயில்லையா எனக்கேட்டது;
புறாவைக் காப்பதாய்ச் சொன்ன மன்னன்
பருந்தையும் காக்கத்தான் கடமைப் பட்டதை
புரிந்தே இரக்கம் கொண்டு அப்பருந்தின்
பசிப்பிணி போக்க தன்சதை தந்தானே!



சிபியின் இந்த நற்செயலே நாமிங்கு
சிறப்பாய்ப் பேசிடும் நடுவுநிலைமை என்பேன்;
சிற்றுயிர் கன்றின் உயிரென எண்ணாது
சிந்திய கண்ணீருக்கு ஒப்பற்ற மதிப்பளித்து
சிறப்பாய் நீதியை நிலைநிறுத்த இளவரசின்
சீருடலிரு துண்டாகும்படி தேரோட்டிய மனுநீதியும்
சிந்திக்க வைக்கின்றான் சமநீதி எதுவெனவே!

இந்திய நீதிமன்றத்தில் உள்ள நீதிதேவிசிலை
இனியேனும் அங்கு இல்லாமல் போகட்டும்;
இனிதாய் நியாயம் வழங்கிய சிபியேந்திய
துலாக்கோல் அங்கிருக்கட்டு மதுசமநீதியை என்றும்
தூக்கிக்காட்டட்டும் எல்லோருக்கும் நடுவுநிலைமை எதுவென்றே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# நீ இன்றி நான் இல்லை

நீ இன்றி நான் இல்லை
என் அன்பே சிறு சிறு பிணக்குகள் வந்திடினும்
நீ இன்றி உயிர் வாழ்தலும் சாத்தியமோ?

நிலத்தினூடே கலந்திட்ட நீராய்
நிழலினூடே கலந்திட்ட உருவமாய்!



ஊனுடன் கலந்திட்ட உயிராய்
உதிரத்துடன் கலந்திட்ட உணர்வாய்!

எனதன்பினில் கலந்திட்ட நீயாய்
உனதன்பினில் கலந்திட்ட நானாய்!
வாழ்ந்திட வாழ்வும் சுவைதானன்றோ?

கனவுகளும் கை கூடிட வேண்டும்
எந்நாளும் நினைவுகளில் நிறைந்திட வேண்டும் நாமுமே!

நிதம் நிதம் உரைக்கிறது என் எண்ணமதில்
நீ இன்றி நான் இல்லை என்றே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# ஈரப்பதம்

கரும்மேகம்
கொண்டிருக்கும்
ஈரப்பதம் போல்

நம் பாதம் பதிக்கும்
நிலம் கொண்டிருக்கும்
ஈரப்பதம் போல்

மரங்களின் வேர்கள்
கொண்டிருக்கும்
ஈரப்பதம் போல்

சில்லென்ற காற்றில்
மறைந்திருக்கும்
ஈரப்பதம் போல்

யாரோ எவரோ எப்படி
வேண்டுமானாலும்
இருந்துவிட்டு போகட்டும்

நீ உன் நிலையில்
என்றும் மாறாமல்
இருந்திடு
உன் இருதயத்தில்
ஈரப்பதத்தோடு

அனைவரிடமும்
அன்பாக
அதே நேரம்
அளவாக பழகிடு.



கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# நனையாத நிலவு

நனையாத நிலவை
பிடித்துத் தந்ததாய்
முன்பே ஒருத்தி
பாடி விட்டாள்

எந்த குளத்து
நிலவைப் பிடித்து
உனக்கு தருவது

அந்திமேகச் செம்மை
அணைத்த தோள்
அளித்திட்ட சிவப்பில்
செங் கோள் கலைந்து
கருமேகஞ் சூடியது

அலையோசை
செவி பக்கம்
அவிழாத படிக்கு
கால்தடம் பதிக்கட்டும்

காலடித் தடம்
கவிதை பேசி
ஈர மணலில்
கடலாடிக் கிடக்கட்டும்



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# காற்றே உன்னருகில்

தளிரை கொஞ்சும்
காற்றே
மேகத்தை உரசும்
காற்றே
மின்னலை இழுக்கும்
காற்றே



மழலையை வருடம்
காற்றே
அலையோடு உறவாடும்
காற்றே
நட்பின் இடைபுகும்
காற்றே
நறுமணம் வீசிடும்
காற்றே
நாற்றம் தூற்றும்
காற்றே

நீரலைக்குள் கவிதை
காற்றே
தலைக்கோதி தழுவும்
காற்றே.

ஆனந்த பூங்காற்றே
அருகில் வாராயோ
இரு உள்ளத்து தேடலில்
இடைபுகுந்து
ஏழிசைக்கவிதை எழுதுகிறாய்

மயக்கி கொண்டு பறந்து
திரிந்து
பருவமங்கையின் இளமை
சூடியே
வேலியில்லாத வெள்ளந்தி
காற்றே

உனக்கொரு தினம்
போதுமா
மலரோடு காதலில்
அலாதி குளுமையில்

அலைபாயும் மனதை
சுற்றி வந்து
ரகசியம் பேசியே
களவாடி போகிறாய்
என் ரகசியமறிந்த
ரகசிய தோழி
வாய்மொழியற்று வளைந்து
போகும் நெளிந்த தென்றலே

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# தங்கம்

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் தங்கமே
உயர்ந்து நிற்கிறது.
பெண்ணும், பொன்னும் பின்னி பிணைந்தது
அல்லவா? இருக்கிறது.
திருமண படலம் ஆரம்பிக்கும்போதே
தங்கம் பிரச்சினை தலை தூக்குமே!
வரதட்சணை அக்காலம் முதல் இக்காலம்
வரையிலுமே தடுக்க முடியாத தவிர்க்க
இயலாத ஒரு தொடர்கதை தானே!
அக்கால அரசவையில் விசேஷ நாட்களில்
பொற்காசுகளை அள்ளி, அள்ளி
தருவதாக படித்திருக்கிறோம்.
இக்கால சேமிப்பில் தங்க பத்திரம் அதிகமாகவே
சேமிக்கப்பட்டு ஆபரணங்களுக்கு இரண்டாம்
பட்சமாகவே ஒதுக்கப்படுகிறது.
தங்கத்தை முதலீடு செய்து பின்வரும் நாளில்
அபரிதமான வளர்ச்சியாகுமே!
நடுத்தர வர்க்கத்தினரின் பாடுதான் படு திண்டாட்டம்
கீழ்மட்ட வர்க்கத்தினரின் கதை மிகவும் சோகமே
பட்டுச் சேலை பளபளக்க கட்டிக்
கொள்ளும் பெண்கள் ஒரு கணம் நினைத்தால்
போதும் பட்டுப் புடவை வேண்டாம் என்பது போல
(பட்டுப்புழுக்களை கொன்று தானே பட்டுப் புடவை நெய்யப்படுகிறது)
தங்க மோகமும் குறைய வாய்ப்புண்டே!
ஆழ் சுரங்கத்தில் தொழிலாளர்கள் போய்
சுரண்டி வந்தால் தானே நாம் மினுக்கமுடியும்.
இன்றைய தேதிக்கு தங்கம்
விலை தாறுமாறாக உயர்ந்து கொண்டே
போகிறது .உலக பொருளாதார மந்தநிலையின்
காரணமாக தங்கத்தின் மீதான முதலீடுகள்
அதிகரிப்பதே இந்த விலை உயர்விற்கான
பிரதான காரணம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.
பொன்னே, மணியே, தங்கமே என்று உச்சி
மோந்து குழந்தையை கொஞ்சி, கொஞ்சி
தங்க தாகத்தை தீர்த்து கொள்ளலாம்.



கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# ஒரு சொல் கேளீர்

1.
உதிர்ந்த ஒற்றைச் சிறகைப்
பற்றிக் கொண்டு
வானத்தைத் தேடுகிறேன்.
வனமே கிடைத்தது.

2
பறவைகளின் எல்லா குரல்களுக்குள்ளும்
புதைந்து கிடக்கிறது
மொழியற்ற சொற்களின்
அகராதி.

3
அழியும் நதித் தடங்களுக்குள்
தேடினால் கிடைப்பது
ஆதி மனிதன் கால்தடங்கள்.

4
மனிதன்,மனிதத்தை
மறக்கும் தருணத்தில் பற்று எல்லை மீறி
வெறியாக மாறி விளையாடி விடுகிறது.

5
உண்டியல் நிரப்பி
உன்னிடம் வேண்டுவோர் மனதில்
மக்கள் ஏழ்மையை விரட்ட
வழியருள்வாய் இறைவா.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# கல்லூரி

அறியாத சொந்தம்
சிறகடித்தேன்,
கனவுகளுக்காக கல்லூரி
வாசலை அடைந்தேன்
என்னைப்போல் சின்னஞ்சிறு
இதயங்கள் இணைந்த இடம் இது!
இனணயத்தில் இணைந்து,
தடுமாற்றத்துடன் தொடங்கி,
தயக்கத்துடன் பேசி,
இருகையில் இடம் கொடுத்து,
சிரிப்பின் சிகரம் தொட்டு,
நண்பனின் உறவை பெற்று,
கண்ணீருக்குள் கரம் கொடுத்து,
உணவை மட்டுமல்ல,
உணர்வுகளையும் பகிர்ந்து,
தவறைத் தட்டிச் சொல்லும் தந்தையும்,
அன்பை பொழியும் அண்ணனுடனும்,
ஓர் கூட்டுப் பறவையானோம்!
ஆயிரம் சலசலப்புகள் இருந்தாலும்
மூன்றெழுத்தில் மட்டும் நிரம்பியது
இந்த நாற்சுவர்!
விண்ணுலகில் அல்ல
மண்ணுலகிலேயே சொர்க்கத்தைக் கண்டேன்.
"எங்கள் வகுப்பறையில்"



கவிஞர் சி.காமேஸ்வரி,ஈரோடு

# அழகிய அந்தி அவளுடன் நான்

கடற்கரை உரசிய அலைகள்
ஏளனம் செய்தது
ஆம்!
உதடு உரசும் வேளையில்
உரையாடல் எதற்கென

உளறிச் சொன்னது போதுமடி
உள்ளத்து மொழியில் நூறுகதை
பேசி தீர்த்தோம் அறிவாயோ

என்னவன் தழுவாத நொடிகளை
உனக்கு தருவேனாடி அலைப்பெண்ணே
இவள் மேலும் சீண்டி இதயம் கீறினாள்

பக்கத்தில் பூ
பார்த்து ரசிக்க நான்
உன்னால் முடியுமா
போடி அலையே துரத்தினேன்



கவிஞனே என்னைப்போல
உன்னவளை தொட்டு தழுவ
முடியுமா என மீண்டும் சீண்டியது

அழகிய அந்தி
அவளுடன் நான்
ஆங்காங்கே தலைகள்
சுற்றிலும் காலடித் தடங்கள்
ஆனாலும், அவளுடன் நான்

அவ்வளவு பொக்கிஷமாடா
கால் நனைக்க விடாமல்
தடுத்து விட்டாயடா
கோபித்துக்கொண்டாள்
அலைமகள்

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்

# பாதையை மாற்று

காலில் முள் தைத்தால்
செருப்பை மாற்று

கற்களே பாதையானால்
உன் பாதையை மாற்று

குறுகலும் நெடுகலுமாய்
தொடரும் பயணங்களில்
தடைகள் ஆயிரம் வரும்



சற்று ஓய்வெடுத்துக் கொள்
சளைத்து விடாதே

உறவுகள் யாவும்
உற்றாரன்று மறந்து விடாதே

உன் தோல்வியில்
மகிழ்வோர் இவ்வுலகோரில் சிலர்

ஆடம்பரம் தவிர்த்து அமைதியாய்
வெற்றிகளைக் கொண்டாடு

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# ஒரு புள்ளி என்ன செய்யப் போகுது?

ஒற்றை புள்ளி ஓராயிரம் வலிகளை
வரிகளில் சொல்கிறது.
ஒற்றை புள்ளியில் தொடங்குது
கவலையும் கண்ணீரும்.

ஒற்றை புள்ளி அழகான
வட்டமும் கிடையாது.
குறுகிய
வட்டமும் கிடையாது.

நீளமான
கோடும் கிடையாது.
அது ஒற்றை புள்ளி தான்.
ஆனாலும் ஏதோ செய்கிறது.

முடிவுறாத தொடர்களுக்கு பின்னால்
அலைவதில் அவைளுக்கு அவ்வளவு ஆர்வம்.
முடிந்த தொடர்களுக்கு பின்னால் இருந்து
கண்ணீர் வடிப்பதில் ஒரு சுகம்.

ஒற்றை புள்ளி வைத்துவிட்ட உன்னை
அந்த ஒற்றை புள்ளியோ என்ன என்ன செய்திடும் தெரியுமா?



கேள்விக் கணைகளை தொடுத்திட
முதல் புள்ளியாய் நின்றிடும்.
ஆச்சரியங்களை அழகுப் பார்த்திட
இறுதி புள்ளியாய் நின்றிடும்.

கவலைகளை எல்லாம் கண்மூடித் தனமாய்
கிறுக்கிட கோபத்தின் புள்ளியாய் நின்றிடும்.
அவல நிலைகளை அலசி பார்த்திட
ஆராயும் புள்ளியாய் நின்றிடும்.

அவமானங்களுக்கு எல்லாம் முற்றுப்புள்ளியாய்
அந்த ஒற்றை புள்ளி நின்றிடும்.
தாழ்ந்தவனுடைய ஓங்கிய குரலின்
ஊமை புள்ளியாய் நின்றிடும்.

கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# உளி தாங்கும் கற்கள்

உளியின் வலியினைத் தாங்கும்போதுதான்
சிலைகளின் வடிவில் வலிய கற்களிலிருந்தே
தீட்டத்தீட்டத்தான் பட்டைத் தீட்டியவைரம்
சிலைபோன்ற பெண்கழுத்தில் மாலையாய் விழவே

கடலின்நீரை இறைப்பவனே உப்புத்தேற்ற
கடலில் இரங்க மறுப்பவனுக்கோ நீச்சலில்லை
கடலலையில் படகோட்டுபவனோ மீனோடும்
கடல்உயிர்வாழும் இனத்தோடு கரையேற

மூச்சுப்பிடித்து மூழ்குபவனே முத்தும் பவளமும்
முடிச்சாய்அள்ளிவர
முனைந்தவர்க்கே எல்லாமெனும்
முழக்கமாய் உழைப்பின் உயர்வை சொல்லிவிட முழங்குவோம்
சங்கெடுத்தே வலியில்லாமல் வழியில்லையென

கண்களில் பொங்கும் கண்ணீரில் விரியும் வானவில்லின்
காட்சி கவின்மிகு எழில் புகைப்படமாகும்
களிகூர்ந்து உழைத்தே மேம்பட்டோரின் எண்ணமதில்
கலைக்கூத்தாடும் மகிழ்வின் வீரியசித்திரமே

அடிதாங்கும் பிள்ளையது உய்ந்திடவே
தீயவழியை அடியோடு விட்டொழிந்தே
வாழ்வின் பாதை தேடிடவே
அட்டைபோல் அடுத்திருப்போரை அண்டிவாழாது
அன்பராய் உயர்த்திடுவோம் வாழ்வின் மாண்பினையே



சிலைகள் உளியின் வலிதாங்கும் கற்கள் மூலமே
சிற்பங்கள் சிறக்கும் சிற்பியின் வியர்வைகள் வழியே
சிந்தையில் உழைப்பின் உயர்வை ஊற்றிவைத்தால்
சிறப்பாகும் வாழ்க்கை வானம் வானவில்லோடே!

கவிஞர் இரஜகைநிலவன்,மும்பை

# அன்னை ஸரஸ்வதி



பார்வியக்கும் விந்தையிலும் விந்தையிது! ஸரஸ்வதிப்பேர்
தெய்வமொன்று: "அறியாமை இருள்போக்கும்! அறிவுஒளி
தான்வழங்கும்!" என்றதொரு நம்பிக்கை கொண்டதது!
இந்துமத சார்பினதே! இஸ்லாமிய நாடான
இந்தோநே ஷியாஅரசு கலாசார பரிசாக
அமெரிக்கா தன்றனுக்கே வழங்கியதால் கௌரவித்தது!
பதினாறடி உயரமது! வாஷிங்டன் மாண்வெள்ளை
மாளிகைசார் மாஸசூசெட்ஸ் அவென்யூ தூதரக
வாயிலிலே அமைந்துளது! இஸ்லாமியர் எண்பத்தெண்
சதவீதம்! இந்துக்கள் மூன்றுசதமே! தென்கிழக்கு
ஆசியத்து நாடதுவே! " ஐநியூமென் சுதரவா" பேர்
பாலிநேசி சிற்பியவர் ஐவருதவி ஐந்துவாரம்
இச்சிற்ப வடிவமைப்பே! ரேடியமும் பொன்னதுவும்
உடைகிரீட அலங்கரிப்பே! வெண்தாமரை மேல்நின்ற
கோலத்தே நான்குகரம்: ஒன்றினிலே ஜபமாலை;
மற்றொன்றில் ஏடமைய; மற்றிருகரம் வீணையொடு;
ஆன்மீகக் கலையோடு பண்பாடு உணர்த்துகோலம்!
திருவடியில் அன்னமோடு மதநல்லிணக் கமுணர்த்தும்
சிலநாட்டு சிறுவருரு அமைப்போடு பாலிநேசிய
சிற்பக்கலை தோற்றமதே! பயனெண்ணில்: அமெரிக்க
இந்தோநே சியவுறவு வலுப்படுதல்! மக்களிடையே
தொடர்பதுதான் மேம்படுதல்! இந்துமதக் கருத்துக்கள்
பரவிடுதல்! இனமதமொழி நாடுகடந் தபலராலும்
ஏற்கும்வகை அமைந்திடுதல்! என்பவற்றால் மாணுடைத்தே!
நமக்கதுநல் வழிகாட்டி! மதயிணக்கம் காணுதற்கே!
வேற்றுமைகள் பாராது ஒருமைதனை எண்ணுவமே!
மனிதநேயம் பேணுவமே! "யாதுமூரே! யாவரும்நம்
கேளிரெ"ன்றே வாழ்ந்துயர்வோம்! ராம்ரஹீமும் ஒன்றென்றே
ஸகோதரராய் இணைவோமே! ஒற்றுமையால் பாரகத்தே
மேம்பட்டு; ஞாலத்தே மாணுற்று வாழ்வோமே!

கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# உபதேசம்

கரும்புகையைக் கக்கியபடி
கடந்த வாகனத்தில்
கண்ணில் பட்ட வாசகம்
"சுற்றுச்சூழல் காப்போம்!"

ஓரமாய் நின்றிருந்த வாகனத்தில்
ஓடிக்கொண்டிருந்தது என்ஜின்
எழுதியிருந்த வாசகமோ
எரிபொருள் சிக்கனம்
தேவை இக்கணம்!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்

(பாகம் ஒன்று)

சோழ நாட்டில் தலைசிறந்த நகரங்களில் ஒன்று சீர்காழி
சூழும் பிரளயம் வந்த போது தோணியாக மிதந்த ஊர்
வாழவாதாரத்திற்கு நெல் விளையும் வளமான நகரம்
தாழ்மையான அடியார்கள் வேதங்கள் ஒலிக்கும் பேரூர்

பிரமபுரம், வேணுபுரம் , பெரும்புகலி, வெங்குரு மற்றும்
சிரபுரம் , வெண்குரு, திருத்தோணி புரம் , பூந்தரா மற்றும்
புறவம் , செண்பக நகரம், கொச்சைவயம் , திருக்கழு மல
பரவலாக இப்படி மறு பெயர்கள் பெற்ற ஊர் சீர்காழி .

அப்பதியின் அந்தணர் தம் குடியில் முதல்வராக வந்தவர்
செப்பும் நெறி வழுவாது வாழ்ந்தவர் சிவபாத இருதயர்
எப்பவும் கணவர் வழி நடக்கும் பகவதி துணைவியானார்
இப்புவியில் புகழ் பெற்ற தம்பதிகளாக வலம் வந்தார்கள்

இத்தம்பதியர் தவப்பயனால் அவதரித்த தெய்வக் குழந்தை
எத்திசையிலும் தமிழும் சமயமும் செழிக்க வந்த குழந்தை
புத்தியால் புனல், அனல் வாதம் சமணத்தை சாய்த்த குழ்ந்தை
வித்தியாசமின்றி கோவில்கள் சென்று பதிகம் பாடிய குழந்தை




அது ஒரு உலக அதிசயம் நிகழும் மறக்கமுடியாத நாள்
இது நாள் வரை வளர்ந்த குழந்தைக்கு மூன்று வயது
எதுவும் தெரியாமல் தந்தையின் பின்னே செல்கிறான்
பதுமையான மழலை, தந்தை நீராட படியில் காத்திருக்க,

மந்திரங்கள் சொல்லி குளத்தில் மூழ்கினார் சிவபாதர்
எந்திரமாக இருந்தவன் தந்தையைக் காணாது அழுதான்
இந்திரலோகத்தில் அம்மையப்பனுக்கு அழுகை கேட்டது
தந்திபோல் சிசுவின் குரல் கேட்டு உடன் வந்தனர் இருவரும்

பார்வதி பாலகன் இதழ்களில் ஞானப்பாலை புகட்டினாள்
காரியம் முடித்து கரையில் கண்டார் உதட்டில் வழியும் பால்
யார் கொடுத்தது பால்?'' அடிக்க கையை ஓங்கினார் தந்தை
'பார்க்கவி'யைக் கை காட்டி ஞானசம்பந்தர் பதிகம் பாடினார்

"தோடு உடைய செவியன் விடை யேறி ஓர் தூ வெண்மதி சூடி
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரால் முனைநாள் பணிந்து ஏத்தஅருள் செய்த
பீடு உடைய பிர மாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே.''

தந்தை மகனை அடிக்க ஓங்கிய கை தானே இறங்கியது
சிந்தை மகிழ்ந்து கண்ணீர் மல்க தனயனை வாங்கினார்
"இந்த தெய்வக் குழந்தையை பெற என்ன தவம் செய்தேன்"
வந்த பக்தர்கள் திருஞானசம்பந்தரின் பாதம் பணிந்தனர்

உமையொரு பாகனின் திருவருள் பெற்ற ஞானக் குழந்தை
இமைப்பொழுதும் ஈசனை நீங்காமல் நினைவில் கொண்டவர்
எமையாளும் எம்பெருமானின் திருத்தலங்கள் சென்றார்
சமயமும் தமிழும் தழைக்க பதிகங்கள் பாடினார் .

தொடரும்...

கவிஞர் ந.திருக்காமு

# கம்பதாசன்

(கட்டுரை)

## வாழ்க்கைக் குறிப்பு



கம்பதாசன் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் மருங்கே உள்ள உலகாபுரம் என்ற கிராமத்தில், (குலாலர்) குயவர் குலத்தில் சுப்பராயர் - பாலம்மாள் தம்பதிக்கு 1916ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி பிறந்தார். பெற்றோருக்கு இவர் ஒரே மகன். மற்றவர் ஐவரும் பெண்கள். இவரது இயற்பெயர் அப்பாவு. பெற்றோர் இவரை "இராஜப்பா" என்று செல்லமாக அழைத்தார்கள். கம்பன் மீது அதிக பற்றுக் கொண்டவர் என்பதால் கம்பதாசன் என்ற புனைப் பெயரை வைத்துக் கொண்டார்.

ஆறாம் வகுப்பு வரைதான் தனது படிப்பைத் தொடர்ந்துள்ளார். கவிஞரின் குடும்பத்தினர் அவரது இளமைப் பருவத்திலேயே சென்னையைச் சேர்ந்த புரசைவாக்கம் பகுதிக்கு குடிபெயர்ந்துள்ளனர். அங்குள்ள குயப்பேட்டை நகர சபைப் பள்ளிக் கூடத்திலேயே தமது படிப்பைத் தொடர்ந்துள்ளார். நடிப்புக் கலையிலே நாட்டம் ஏற்பட்டதால், ஆரம்பப் பள்ளிக்கு மேல் இவர் நாட்டம் கொள்ளவில்லை. நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். நாடகங்களுக்குப் பாட்டெழுதினார். கம்பதாசனுக்கு நல்ல குரல் வளம் இருந்தது. நாடகங்களில் பாடுவார். பாடகராகவும் புகழ் பெற்றார். ஆர்மோனியமும் வாசிப்பார்.

## திரைப்படத்துறையில்

மிகவும் இளமைக் காலத்திலேயே 'திரௌபதி வஸ்திராபரணம்', 'சீனிவாச கல்யாணம்' போன்ற படங்களில் தனது நடிப்புத் திறனைத் காட்டி நின்றார். 1940 ஆம் ஆண்டில் வெளிவந்த வாமன அவதாரம் என்ற படத்திற்கு முதன் முதலாகப் பாடல் எழுதினார்.

# கம்பதாசன்

(கட்டுரை)

## திரைப்படத்துறையில்

அதனைத் தொடர்ந்து வேணு கானம், மகாமாயா, பூம்பாவை, மங்கையர்க்கரசி, ஞானசௌந்தரி, அவன், வானரதம் போன்ற பல திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதியும், கதை வசனம் எழுதியும் புகழின் உச்சியில் காணப்பட்டார். இதில் அவன், வானரதம், அக்பர் போன்ற திரைப் படங்களில் இவர் எழுதிய பாடல்கள் இன்னும் காலத்தால் அழியாத பாடல்களாகவும், திரைப்பட ரசிகர்களால் மறக்க முடியாத பாடல்களாகவும் காணப்படுகின்றன.

தமிழில் மறுமலர்ச்சிப் பாடல்களை எழுதத் தொடங்கினார். சமதர்மக் கொள்கை கொண்ட கம்பதாசன், தாம் எழுதிய திரைப்படப் பாடல்களில் முற்போக்குக் கருத்துகளை எளிய நடையில் புகுத்தினார்.

தமிழ் உணர்வுமிக்க அவருக்குப் போட்டிகள் நிறைந்த திரையுலகம் அதிக வாய்ப்பைத் தராவிட்டாலும், குரல் அசைவுப் படங்களுக்கு (டப்பிங்) அதிகம் எழுதியிருக்கிறார். "வானரதம்" என்ற இந்தித் திரைப்படத்தின் தமிழாக்கப் பாடலில் எளிய தமிழைப் பயன்படுத்தினார்.

கம்பதாசனின் கவித்திறமையை அடையாளங்காட்டி "கனவு" என்ற கவிதை நூல் 1941இல் வெளிவந்தது.

## குடும்பம்

மலையாளப் பெரும் கவிஞர் வள்ளத்தோள் என்பவரின் மகளும், நாட்டியத் தாரகையுமான சித்திரலேகா என்பவரை கம்பதாசன் முதன் முதலாக மணந்தார். நீண்ட காலத்துக்கு உறவு முறை நீடிக்காமல் குறுகிய காலத்திலேயே மண வாழ்க்கை முறிந்தது. பின்னர் கவிஞர் சுசீலா என்ற பாடசாலை ஆசிரியையை இரண்டாந் தாரமாக மணந்து கொண்டார்.

# கம்பதாசன்

(கட்டுரை)


## குடும்பம்

கவிஞர் சுசீலா என்ற பாடசாலை ஆசிரியையை இரண்டாந் தாரமாக மணந்து கொண்டார். அதுவும் தோல்வியில் முடியவே பின்னர் அனுசுயா என்ற இன்னொரு நர்த்தகியை மணந்து கொண்டார்.

உடல்நலக் குறைவு காரணமாக இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கவிக்கனல் கம்பதாசன், 1973 ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் நாள் காலமானார்.

## எழுதிய நூல்கள்

கவிதைத் தொகுப்புகள்
கனவு; 1941; வங்கக்கவி ஹரிந்தீரநாத் முன்னுரையுடன்
விதியின் விழிப்பு
முதல் முத்தம்
அருணோதயம்
அவளும் நானும்
பாட்டு முடியுமுன்னே
புதுக்குரல்
தொழிலாளி
நாடக நூல்கள்
ஆதிகவி
சிற்பி
சிறுகதைத் தொகுதி
முத்துச் சிமிக்கி
சிலோன் விஜயேந்திரன் தொகுத்து வெளியிட்டவை
கம்பதாசனின் கவிதைத் திரட்டு (1987)
கம்பதாசன் திரை இசைப்பாடல்கள் (1987)
கம்பதாசன் காவியங்கள் (1987)
கம்பதாசன் சிறுகதைகள் (1988)
கம்பதாசன் நாடகங்கள் (1988)
கம்பதாசன் கவிதா நுட்பங்கள் (1997)
எழுதிய சில திரைப்படப் பாடல்கள்
மின்னல் போலாடுமிந்த வாழ்க்கையே (1953)
கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே (அக்பர்- 1961, இசை - நொவ்ஷத், பாடியவர்: பி. சுசீலா
கல்யாண ஊர்வலம் வரும் உல்லாசமே தரும் (அவன் - 1953, இசை - சங்கர் ஜெய்கிஷன், பாடியவர்: ஜிக்கி




நன்றி
https://ta.wikipedia.org
https://www.dinamani.com/

கவிஞர் அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
முடிந்த பிரச்சினைகளை
நினைத்து கவலை
அடைவதை நிறுத்தி விட்டு
வரும் காலத்தை துணிந்து
தன்னம்பிக்கையுடன்
எதிர்த்து நில்லுங்கள்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

agaramuthalaa

aagaramuthala@gmail.com